முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No.179/2021

தேதி : 20-11-2025

(வா.சா.2) - திரு.தங்கராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம். வாதி என் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பல ஆண்டாக தெரியும் என்றால் சரிதான், 10 ஆண்டாக தெரியும். அவரிடம் வரவு செலவு செய்தேன் என்றால் இலலை. கிரைய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்ததில் சொல்லியுள்ள முழு விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். எதற்காக சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் என் தம்பி கிரையம் வாங்குவதாக சொன்னார் அதனால் சாட்சி கையெழுத்து போட்டேன். கிரைய ஒப்பந்தம் எவ்வளவு ரூபாய்க்கு போடப்பட்டது என்றால் 10 லட்சம், அதில் முன்பணம் 5 லட்சம் கொடுக்கப்பட்டது. எந்த தேதியில் போடப்பட்டது என்றால் 03.11.2017. கிரைய தேதியை நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். சொத்து விபரம் தெரியுமா என்றால் தெரியும். சொத்து எங்குள்ளது என்றால பிருந்தாவனம் கார்டனில் உள்ளது. சொத்து விவசாய நிலமா என்றால் இல்லை, பிளாட். எத்தனை சதுரடி என்றால் சதுரடி தெரியாது, 8.5 செண்ட்.

2. கிரைய ஒப்பந்தம் போடும் அதன் மதிப்பு என்ன என்றால் தெரியாது. நான் தெரியாது என்று சொல்வது உண்மையல்ல என்றும், அப்போது 1 செண்ட்டின் விலை ரூ. 5 லட்சம் இருந்தது என்றும், கிரைய ஒப்பந்தம் கடனிற்காக போடப்பட்டது என்றும், தற்போது வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மீதத் தொகை ரூ. 5 லட்சம் எத்தனை நாட்களுக்குள் தருவதாக சொல்லப்பட்டியிருந்தது என்றால் 3 ஆண்டுகள், அப்போது பட்டா அவர் பெயரில் இல்லாததால், அதை தயார் செய்வதற்காக 3 ஆண்டு காலக்கெடு போடப்பட்டது. 3 ஆண்டு காலம் எப்போது முடிவடைகிறது என்றால் ஞாபகமில்லை. பிரதிவாதிக்கு

பாக்கி எவ்வளவு கொடுக்கவேண்டும் என்றால் மீதம் 1 லட்சம் கொடுக்கவேண்டும், 4 லட்சம் ரூபாயை 2020ல் தன்னுடைய மருத்துவ செலவு என்று பிரதிவாதி கேட்டதால் கொடுத்துவிட்டார்.

3. நிரூபணவாக்குமூலத்தில் அந்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி பல ஆண்டாக மேற்கு கிரி வீதியில் பேன்சி கடை நடத்தி வருகிறார் என்றும், அச்சமயத்தில் வாதியிடம் பிரதிவாதி பல ஆண்டாக வரவு செலவு வைத்துள்ளார் என்றும், வழக்கு தொகை அதிக தொகை என்பதால் அதற்கு ஆதரவாக கிரைய ஒப்பந்தம் போடப்பட்டதே தவிர, கிரையத்திற்காக போடப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி ரூ.9 லட்சத்தினை கொடுக்க தயாராக உள்ளார் என்றால் வாதி கிரையத்திற்காக தான் போட்டேன், எனவே அதைபற்றி நான் சொல்ல முடியாது.

K RENUGADEVI

Digitally signed by K RENUGADEVI
Date: 2025.11.20 14:03:39 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.